பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 05 சனிக்கிழமை 22.10.2022 கதிர் 238

## 28 தமிழ் எம்.பி.க்களில் 19 பேர் 22 இற்கு ஆதரவு

### 9 பேர் பங்கேற்கவில்லை

இலங்கையின் 9 ஆவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 19 பேர் அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். 9 எம்.பிக்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

2

# வீதியில் சென்ற மாணவியிடம் சங்கிலியை அபகரித்த இராணுவ உத்தியோகத்தர் மக்களால் மடக்கிப்பிடிப்பு!




### பலாலியில் பட்டப்பகலில் பரபரப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்., பலாலி - வள்ளுவர்புரத்தில் வீதியில் சென்ற மாணவியின் தங்கச் சங்கிலியை அபகரித்துத் தப்பித்தவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

இலங்கை இராணுவத்தில் பணியாற்றுபவரே இவ்வாறு வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டார்.

இந்தச் சம்பவம் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

15 வயது மாணவி தனியார் கல்வி நிலையத்துக்கு சென்றுவிட்டு வீடு திரும்ப வீதியில் நடந்து சென்றார். இதன்போது மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்தவர் மாணவியின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துவிட்டு அவரைக் கீழே தள்ளிவிட்டுத் தப்பித்தார்.

மாணவி காயத்துக்குள்ளாகிய நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் ஊரவர்கள் ஒன்றிணைந்து

8

# 22 ஆவது திருத்தம் நிறைவேற்றம் அனைவருக்கும் கிடைத்த வெற்றி

### நிரந்தர தீர்வுக்காக ஓரணியில் திரள்வோம்; சமூக நீதிக்கான தேசிய இயக்கம் அறைகூவல்



அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை ஜனநாயகத்தை மதிக்கும்இலங்கையின்அனைத்துப் பிரஜைகளுக்கும் கிடைத்த வெற்றி என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

8

சிறையிலுள்ள அரசியல் கைதியான

## வைத்தியர் ரூபவனுக்கு கொலை அச்சுறுத்தல்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளபளை வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் வைத்தியர் எஸ். சிவரூபனுக்குக் கொலை அச்சுறுத்தல் உள்ளது என்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியர் யாழ். போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய காலப் பகுதியில் சுமார் 300 வரையிலான கொலை, பாலியல்வன்புணர்வு, சித்திரவதைகள் உள்ளிட்ட வழக்குகளில் சட்ட வைத்திய அதிகாரியாக முக்கிய சாட்சியமாக உள்ளார்.

8

## நீர் விநியோகத் தடை கொழும்பில் இரத்து!


கொழும்பின் பல பகுதிகளில் இன்று (22) அமுல்படுத்தப் படவிருந்த 14 மணி நேர நீர் விநியோகத் தடை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

முன்னதாக, அத்தியாவசிய திருத்தப் பணிகள் நிமித்தம் இன்றிரவு 10 மணி முதல், நாளை (23) நண்பகல்

2

## சிறுவர் துன்புறுத்தல்கள் இலங்கையில் அதியுச்சம்

### 8 மாதங்களில் 7,568 முறைப்பாடுகள்



இலங்கையில் இந்த வருடத்தின் கடந்த 8 மாத காலப்பகுதியில், சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பில், 7 ஆயிரத்து 568 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவற்றுள் அதிகமான

2

## ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விரைவில் விடுதலை செய்ய வேண்டும்


### ஜனாதிபதியிடம் ஸ்ரீநேசன் கோரிக்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமன்னிப்பு மூலமாக தமிழ் அரசியல்கைதிகள் 8 பேரை விடுதலை செய்தமையையிட்டுப் பாராட்டுகின்றேன். ஏனையதமிழ்அரசியல்கைதிகளையும் தாமதிக்காமல் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியை

8

## மரத்துடன் மோதியது டிபென்டர்; இராணுவக் கப்டன் உயிரிழப்பு



டிபென்டர்வாகனம்விபத்துக்குள்ளானதில் இராணுவக் கப்டன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் 8806 இலக்கம் கொண்ட டிபென்டர் ரக வாகனமே

2

# நிரந்தர தீர்வை வழங்கினால் வரலாற்றில் நிலைத்திருப்பீர்

### ரணிலிடம் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. சுட்டிக்காட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய அரசமைப்பு மூலம் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்கினால் சரித்திரத்தில் நிலைப்பார்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

2

## பஸ்ஸில் யுவதியை வெட்டிய இளைஞர் மடக்கிப் பிடிப்பு

பஸ்ஸில் இளம் பெண்ணைப் பிளேட்டால் வெட்டிக் காயப்படுத்திய இளைஞரை பஸ்ஸில் பயணித்த சக பயணிகள் மடக்கிப் பிடித்து

8

## போதைப்பாக்குடன் வந்த மாணவன் விசாரணையில் கையை அறுத்தான்

### யாழ். தெல்லிப்பளை பாடசாலை ஒன்றில் சம்பவம்

போதைப்பாக்குடன் பாடசாலைக்கு வந்த மாணவன், தனது கையைப் பிளேட்டால் அறுத்து காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்., தெல்லிப்பளை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

8

## 28 தமிழ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரணிப் பக்கம் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகள் 22 இற்கு ஆதரவு வழங்கின. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரேயொரு தமிழ் எம்.பியான வடிவேல் சுரேஷ், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை.

அரச பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்பன 22 இற்கு ஆதரவாக வாக்களித்தன.

9 ஆவது நாடாளுமன்றத்துக்கு பொதுத்தேர்தலில் மக்களின் அங்கீகாரத்துடன் 25 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர். தேசியப்பட்டியல் ஊடாகவும் மூவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை விவரம்:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 10
தமிழ் முற்போக்குக் கூட்டணி -06
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - 02
ஈ.பி.டி.பி. - 02
தமிழ் மக்கள் தேசிய முன்னணி - 01
தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி - 01
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - 01
ஐக்கிய மக்கள் சக்தி - 01
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - 02
சிறிலங்கா பொதுஜன பெரமுன - 02

22 இற்கு ஆதரவாக வாக்களித்த எம்.பிக்கள்

**தமிழ் முற்போக்குக் கூட்டணி**

1. மனோ கணேசன்
2. பழனி திகாம்பரம்
3. வே. இராதாகிருஷ்ணன்
4. எம். உதயகுமார்
5. அ. அரவிந்குமார் (ஆளுங்கட்சி)

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்**

6. ஜீவன் தொண்டமான்
7. மருதபாண்டி ராமேஸ்வரன்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

8. செல்வம் அடைக்கலநாதன்
9. தர்மலிங்கம் சித்தார்த்தன்
10. சிவஞானம் சிறீதரன்
11. சார்ள்ஸ் நிர்மலநாதன்
12. கோவிந்தன் கருணாகரம்
13. தவராசா கலையரசன்

**சிறிலங்கா பொதுஜன பெரமுன**

14. சுரேன் ராகவன்
15. சதாசிவம் வியாழேந்திரன்

**ஈ.பி.டி.பி.**

16. டக்ளஸ் தேவானந்தா
17. கு. திலீபன்

**தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி**

18. சிவநேசத்துரை சந்திரகாந்தன்

**தமிழ் மக்கள் தேசிய முன்னணி**

19. சி.வி. விக்னேஸ்வரன்

**22 மீதான வாக்கெடுப்பில் பங்கேற்காத எம்.பிக்கள்**

1. இரா. சம்பந்தன் (கூட்டமைப்பு)
2. எம்.ஏ. சுமந்திரன் (கூட்டமைப்பு)
3. இரா. சாணக்கியன் (கூட்டமைப்பு)
4. எஸ். வினோநோகராதலிங்கம் (கூட்டமைப்பு)
5. வடிவேல் சுரேஷ் (ஐ.ம.ச.)
6. எம். வேலுகுமார் (த.மு.கூ.)
7. அங்கஜன் இராமநாதன் (சு.க.)

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

8. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
9. செல்வராசா கஜேந்திரன்

சுகயீனம் மற்றும் தனிப்பட்ட காரணங்களால்தான் வாக்கெடுப்பில் தாம் பங்கேற்கவில்லை என்று மேற்படி 9 எம்.பிக்களும் தெரிவித்துள்ளனர்.

## நீர் விநியோகத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

12 மணிவரை கொழும்பின் பல பகுதிகளில் நீர்விநியோகத்தடை அமுல்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு - 02 தொடக்கம் கொழும்பு - 10 வரை சுமார் 14 மணித்தியாலங்களுக்கு அமுல்படுத்தப்படவிருந்த இந்த நீர் விநியோகத் தடை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பின் 02, 03, 04, 05, 07, 08, 09 மற்றும் 10 ஆகிய பகுதிகளில் நீர் விநியோகம் தடைபடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரத்துடன்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்குள்ளாகியுள்ளது. சாரதி, வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து முத்துவெல்லவில் உள்ள மரத்துடன் மோதியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த டிபென்டர் வாகனம் இன்று அதிகாலை திருகோணமலையில் இருந்து மாதுரு ஓயா நோக்கிப் பயணித்துள்ளது.

உயிரிழந்தவர் நான்காம் விசேட படையைச் சேர்ந்த கப்டன் தேவிந்த உட்வார்ட் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## சிறுவர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. சிறுவர்கள் மீதான தாக்குதல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், தொழிலாளியாகப் பயன்படுத்தல் மற்றும் யாசகத்தில் ஈடுபடுத்தல் என்பன தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். கம்பஹா, குருநாகல், அநுராதபுரம், கண்டி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை முதலான மாவட்டங்களிலும், சிறுவர்கள் தொடர்பாகக் கிடைக்கும் முறைப்பாடு களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர் துன்புறுத்தல்கள் குறித்து, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின், 1929 என்ற இலக்கத்தை அழைத்து முறைப்பாடளிக்க முடியும்.

கடந்த 2021ஆம் ஆண்டு 11 ஆயிரத்து 187 முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

சிறுவர்கள் மீதான துன்புறுத்தல்கள் குறித்து, அவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, அறிக்கையிடப்பட்டதை விடவும் பெருமளவான சம்பவங்கள் அறிக்கையிடப்படாதுள்ளன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிரந்தரத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டையும் மக்களையும் வளப்படுத்த ஒரே வழி பல்லின மக்களையும் நல்லிணக்கச் செயற்பாடுகள் மூலம் ஐக்கியப்படுத்த வேண்டும். அதனைச் செய்வதாயின் இன, மத சார்பற்ற அரசமைப்பும், ஆட்சி முறையும் இந்த நாட்டில் மலர வேண்டும்.

மூவின மக்களும் ஒன்றிணைந்து வாழ வேண்டுமாயின் தேசிய இனப்பிரச்சினை நியாயமாகவும் –நிலையாகவும் தீர்க்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் சரித்திரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிலைப்பார். இல்லையென்றால் அவர் நிலையார் என்பதை அவரே அறிவார். சமத்துவம், சமவுரிமை இல்லாத நாட்டில் மகத்துவம் விளையாது என்பதே 74 ஆண்டுகள் நாம் பெற்ற படிப்பினையாகும் – என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலும் மைத்திரியும்

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டன. தாம் அந்த ஜனாதிபதி பதவியில் இருந்து கொண்டு, தமது அந்த அதிகாரங்களை வெட்டிக் குறைக்க முன்னின்றுழைத்த உண்மையான ஜனநாயக அரசியல் தலைவர் மைத்திரிபால சிறிசேனதான்.

அந்த 19 ஆவது திருத்தத்தை கொண்டு வந்த நல்லாட்சி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஆக, 48 எம்.பிக்களை மட்டும் வைத்துக் கொண்டு தான் அந்த அரசை அவர் அப்போது கொண்டிழுத்தார். அத்தகைய சிறுபான்மை அரசு இத்துணை பெரிய அரசமைப்பு மாற்றத்தை செய்வதற்குக் காலாகவும், உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்து அதைச் செய்வித்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே. அதற்கு வேறு யாரும் அரசியல் உரிமை கோருவது அபத்தமானது.

அந்த 19 ஆவது திருத்தத்தின் மூலம் வெட்டப்பட்ட அதிகாரங்களை 20 ஆவது திருத்தம் மூலம் மீள சுவீகரித்துக் கொண்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அது நமக்குத் தெரிந்த சரித்திரம்.

இப்போது மீண்டும் 19 ஆவது திருத்தபடி ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்காக 22 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறி மெச்சப்படுகின்றது.

தமது பதவிக்கான அதிகாரத்தைத் தாமே வெட்டிக் குறைக்கும் முயற்சியை முன்னெடுத்த உண்மையான ஜனநாயக ஆட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என்ற புகழாரம் வேறு இப்போது சூட்டப்படுகின்றது.

அவ்வளவும் ஹம்பக். அபத்தம். இது விடயத்தில் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிட்டவும் நிறுத்தும் தகுதி கொண்டவரல்லர் ரணில் விக்கிரமசிங்க என்பதுதான் உண்மை.

ஆறு ஆண்டு காலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மைத்திரி 19 ஆவது திருத்தம் மூலம் அதனை ஐந்து ஆண்டுகளாக வெட்டி குறைக்க இணங்கி னார். பின்னர் பதவிக்காலத்தின் முடிவில் அந்த ஓராண்டை மீளப் பெறுவதற்கு வழி இருக்கின்றதா என்று அவர் ஆராய்ந்தார் என்பது வேறு விடயம்.

இப்போது 19 ஆவது திருத்தத்தின் மூலம் வெட்டிக் குறைத்த ஜனாதிபதியின் நிறைவேற்ற அதிகாரங்களில் பல 22 இல் மீள வெட்டிக் குறைக்கப்படவில்லை. அது சுமந்திரன் சுட்டிக்காட்டுவது போல ஒரு பம்மாத்து நிறைவேற்றதிகாரக் குறைப்புத்தான்.

- எந்த அமைச்சையும் ஜனாதிபதி தம் வசம் வைத்திருக்க முடியும்.
- தாம் விரும்பிய நேரத்தில் பிரதமரை வீட்டுக்கு அனுப்பவும் விரும்பிய வரைப் பிரதமராக நியமிக்கவும் ஜனாதிபதியால் முடியும்.
- அமைச்சரவை நியமனத்தில் பிரதமருக்கான தனித்துவ உரிமை பறிக்கப்பட்டுள்ளது.
- நாலரை வருடங்களின் பின்னர்தான் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம் என்ற விடயம் இரண்டரை வருடங்களாக உள்ளது.
- சுயாதீன ஆணை குழுக்களை அமைக்கும் விடயத்தில் சுயாதீனமும், அரசியல் கலப்பின்மையும் முற்றாகச் சிதறடிக்கப்பட்டுள்ளன.

– இப்படி 19க்கும், 22க்கும் நிறைவேற்று அதிகாரக் கட்டுப்பாடுகளில் பெரு வித்தியாசம். 19 இன் சிறப்புக்கும் பெருமைக்கும் கிட்டவும் வராது 22 ஆம் திருத்தம்.

ஆனால், பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்த ஜனநாயகத் தலைவர் ரணில் எனப் படம் போடுகின்றார்கள். ஏணி வைத்து ஏறினாலும், இந்த விடயத்தில் மைத்திரிபால சிறிசேனவுக்கு கிட்ட ரணிலோ, ஏனைய ஜனாதிபதிகளோ வர முடியாது என்பதுதான் நிஜம்.

## கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வைகோரி பாலாவி முகாம் மக்கள் போராட்டம்!




வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 82ஆவது நாள் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொலிகண்டி பகுதியில் உள்ள பாலாவி முகாம் பகுதியில் போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது தமது சொந்த நிலங்களை விட்டு பல வருடங்களாக இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள தம்மை தமது சொந்த நிலங்களில் குடியேற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த 100 நாள் செயல் முனைவின் 82 ஆம் நாள் போராட்டத்தில் பாலாவி முகாமில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ஹற்றனில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீடு பாரிய சேதம்!



ஹற்றன் குடாகம பகுதியில் வீடொன்றின் மீது நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் அந்த வீடு பாரிய சேதம் அடைந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் பகுதியில் பெய்து வரும் கடும் மழையால் வீட்டின் பின்புறமுள்ள மண்மேடு சரிந்து வீட்டின் மீது விழுந்துள்ளது.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீட்டின் ஒரு பகுதி முழுமையாகச் சேதமடைந்துள்ளதாகவும், குறித்த மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும், வீட்டில் வசிப்பவர்கள் தற்காலிகமாக பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் எனவும் ஹற்றன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இலங்கையில் பச்சை நிற அப்பிள் உற்பத்தி முதற்பழம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது



இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பச்சை நிற அப்பிள் பழத்தின் முதல் அறுவடை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் வியாழக்கிழமை முற்பகல் பழம் கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எம்.பி. லக்ஷ்மன் குமார எனும் விவசாயியே கல்கமுவ, தம்புத்தேகம பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் காணியில் இந்த அப்பிள் விளைச்சலை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி விவசாயிடம் பயிர்ச்செய்கை தொடர்பில் தகவல்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அப்பிள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை நேரில் வந்து பார்ப்பதற்கு எதிர்பார்த்திருக்கிறார் எனவும் கூறினார்.

அப்பிள் விதைகளை நாட்டுக்கு எடுத்து வந்து பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னரே, பயிர்ச்செய்கையை முன்னெடுத்ததாகவும் இரண்டு ஏக்கரில் அறுவடை கிடைத்திருப்பதாகவும் விவசாயி லக்ஷ்மன் குமார தெரிவித்தார்.

இந்த விளைச்சலை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்து, அவற்றை விநியோகிப்பதற்கு முடியுமென்றும் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் இதற்கான பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் வகையிலேயே இந்த விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயி கையளித்த பச்சை நிற அப்பிளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதனை ருசி பார்ப்பதற்கும் மறக்கவில்லை.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சம்பிகா பிரேமதாஸ் மற்றும் பீ.ஜே.அசங்க லயனல் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
சனிக்கிழமை 22.10.2022

# அரச எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டோரில் 62 பேரைக் கொன்று குவித்தது சாட் இராணுவம்!

## பல நாடுகளும் கண்டனம்





ஜாமெனா, ஒக்.22

மத்திய ஆப்பிரிக்க நாடான சாட் குடியரசில், அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அறுபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியாவின் அண்டை நாடான, சாட் நாட்டில் கடந்த ஆண்டு, போர்க்களத்தில் சாடியன் படைகளை பார்வையிட சென்ற போது அப்போதைய அதிபர் இட்ரிஸ் டெபி இட்னோ கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார். 30 ஆண்டுகளுக்கும் மேலாக அதிபர் பதவியில் இருந்த தனது தந்தையின் படுகொலையை தொடர்ந்து, மஹமத் இட்ரிஸ் டெபி கடந்த ஆண்டு அதிபராக பொறுப்பேற்றார்.

இடைக்காலத் தலைவராக பொறுப்பேற்ற மஹமத் இட்ரிஸ் டெபியின் பதவிக்காலம் இரண்டு வருடம் நீடிப்பு செய்யப்பட்டது. இதற்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றமையுடன், அவர் பொறுப்பேற்ற பின் நடைபெறும் அரசாங்கத்திற்கு எதிரான மிகப்பெரிய போராட்டம் இதுவாகும்.

பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை மக்கள் மீது வீசினர். ஆனாலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்து முன்னேறியமையுடன் அவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பின்னர் பாதுகாப்புப் படையினர் அவர்களை விரட்டும் நோக்கில் துப்பாக்கிச் சூடு நடத்தினர், போராட்டக்காரர்கள் சம்பவ இடத்திலிருந்து பின்னகர்ந்தனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை அடுத்து தலைநகர் ஜாமெனாவில் 30 பேர் உயிரிழந்தனர் என சாடியன் அரசாங்க செய்தித் தொடர்பாளர் அஜிஸ் மஹமத் சலே தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர்களில் சாட் நாட்டின் பத்திரிக்கையாளரான நர்சிஸ் ஒரேட்ஜேவும் ஒருவர் எனக் கூறப்படுகின்றது.

மேலும், வன்முறையை அடுத்து ஊரடங்கு உத்தரவை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சாட் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மவுண்டோவிலும் 32 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. இந்தப் போராட்டங்களில், 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.


மேலும், பிரான்ஸ், ஆப்பிரிக்க யூனியன் உள்ளிட்ட பல நாடுகளும், அமைப்புகளும் அதிபர் எதிர்ப்பு போராட்டங்களை ஒடுக்க இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியதை வன்மையாக கண்டித்துள்ளன.

ர்வதேச மன்னிப்புச்சபை பிராந்திய இயக்குனர் சமிரா தாவூத், போராட்டக்காரர்களுக்கு எதிராக இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சாட் நாட்டின் அதிகாரிகளை வலியுறுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனா உயிரிழப்புகள் குறைந்தாலும் கூட சர்வதேச பொது சுகாதார அவசர நிலை நீடிப்பு!

## உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு



ஜெனீவா, ஒக்.22

சீனாவின் வுகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டதுடன், தற்போது கொரோனா வைரஸ் 228 நாடுகள், பிரதேசங்களுக்குப் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவைக் கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ்பெருந்தொற்று பரவத்தொடங்கி, உலகில் இன்றளவும் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும், இந்தத் தொற்றினால் ஏற்படுகின்ற உயிர்ப்பலி எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. இருந்தபோதிலும், இந்த தொற்று நோய் இன்னும் சர்வதேசபொது சுகாதார அவசரநிலையாகவே நீடிக்கிறது என்று உலக சுகாதார நிறுவனம் கூறி உள்ளது.

இது அதன் மிக உயர்ந்த எச்சரிக்கை நிலை ஆகும். மற்ற சுவாச வைரஸ்களுடன் ஒப்பிடும்போது கொரோனா இறப்புகள் அதிகமாகவே உள்ளன என அது தெரிவித்தது. கொரோனா தொடர்பான சிக்கல்கள், கொரோனாவுக்குப் பிந்தைய நிலைகள், அதன் தாக்கங்கள் எல்லாமே இன்னும் முழுமையாக புரிந்துகொள்ளப்படாமல் இருப்பதாகவும் சர்வதேச சுகாதார ஒழுங்குமுறை அவசர குழு தெரிவித்துள்ளது.

# பறவைக் காய்ச்சல் வீதம் ஐரோப்பாவில் அதிகரிப்பு:

## 37 நாடுகளில் கண்டறிவு



ஐரோப்பிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் ஏற்படுகின்ற வீதம் தொடர்ச்சியாக அதிகரித்த வருவதாகவும், இதனால் பறவைகள், கால்நடைகள் பல பாதிக்கப்பட்டுள்ளமையுடன், முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இந்தப் பறவைக்காய்ச்சல் இனங் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில், சுவீடன் நாட்டைத் தலைமையகமாக கொண்ட ஐரோப்பிய நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் மற்றும் ஐரோப்பிய உணவு பாதுகாப்பு ஆணையம் ஆகியவை இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐரோப்பிய நாடுகளில் இதுவரை 3,573 பறவைகளுக்கும், 2,464 கால்நடைகளுக்கும் பறவைக் காய்ச்சல் தொற்று பாதிப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொற்று நோய் 37 ஐரோப்பிய நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணத்தால் பல ஐரோப்பிய நாடுகளில் கோழி மற்றும் முட்டை விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப் பஞ்ச நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் பாகிஸ்தான்

## 16 வீத மக்கள் நேரடியாகப் பாதிப்பு

பாகிஸ்தான் நாட்டில் கடந்த ஜூனில் இருந்து பெய்து வரும் தொடர் கனமழை எதிரொலியாக பல்வேறு நகரங்களிலும் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், விளைநிலங்கள், வீடுகள், கட்டடங்களை வெள்ளம் சூழ்ந்தது. லட்சக்கணக்கான மக்கள் நிவாரண முகாம்களுக்கு இடம் பெயர்ந்தனர். அந்நாட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வெள்ள பாதிப்புக்கு பலியானார்கள். கால்நடைகளும் பரவலாக உயிரிழந்தன. இதுதவிர, தோல் நோய், மலேரியாஉள்ளிட்ட பல்வேறு வியாதிதாக்குதலுக்கும் ஆளானார்கள்.

இந்தச் சூழலில், அடுத்த கட்ட நெருக்கடியைச் சந்திக்கும் சூழலுக்கு மக்கள் தள்ளப்பட்டு உள்ளனர். குறிப்பாக பாகிஸ்தானில் 15 முதல் 16 சதவீத மக்கள்உணவு பாதுகாப்பின்மை நெருக்கடியை சந்திக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுஉள்ளனர் என அந்நாட்டின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (எப்.ஏ.ஓ.) துணை தலைவர் பரூக் தொய்ரோவ் கூறியுள்ளார். கொரோனா பெருந்தொற்று, சமீபத்திய வெள்ளம் ஆகியவற்றால் பாதிப்புக்குள்ளான அந்நாடு தெற்காசிய நாடுகளின் வரலாற்றில் உணவு நெருக்கடியால் மிக மோசமடைந்த நாடு என்ற நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது என அவர் கூறியுள்ளார்.

அவர் பேசும்போது, நாடு முழுவதும் 95 லட்சம் ஏக்கர் வேளாண் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கி விட்டன. 45 லட்சம் ஏக்கர் அளவிலான பயிர்கள் சேதமடைந்து விட்டன. சர்வதேச நட்பு நாடுகள் மற்றும் பாகிஸ்தான் அரசாங்கம் இணைந்து, ஒத்துழைப்புடன் செயல்பட்டு நாட்டின் வறுமை பாதிப்புக்கு உள்ளான நெருக்கடி சூழலை எதிர்கொள்ள வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

# ஜம்மு மாநகராட்சித் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி



ஜம்மு, ஒக்.22

ஜம்மு மாநகராட்சி மேயர் பதவியில் இருந்து பா.ஜ.கவின் சந்தர்மோகன் குப்தா, துணை மேயர் பதவியில் இருந்து அக்கட்சியின் பூர்ணிமா சர்மா ஆகியோர் கடந்த மாதம் ராஜினாமா செய்தனர். சட்டசபை தேர்தலில் கவனம் செலுத்துவதற்காக அவர்கள் இந்த முடிவை எடுத்தனர்.

இந்நிலையில் புதிய மேயர், துணை மேயரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று நடந்தது. இதில் பா.ஜ.க. - காங்கிரஸ் இடையே நேரடி போட்டி இருந்தது. ஆனால் இரகசிய வாக்களிப்பு முறைக்கு பதிலாக திறந்தநிலை வாக்களிப்பு முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் கவுன்சிலர்கள் இந்த தேர்தலை புறக்கணித்தனர்.

இந்நிலையில், மேயராக பா.ஜ.கவின் ரஜிந்தர் சர்மாவும், துணை மேயராக பல்தேவ் சிங்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என ஜம்மு மாநகராட்சி ஆணையாளர் ராகுல் யாதவ் அறிவித்தார். 75 கவுன்ஸிலர்களைக் கொண்ட ஜம்மு மாநகராட்சியில் 44 கவுன்ஸிலர்களுடன் பா.ஜ.க. பெரும்பான்மை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆணவக் கொலை, கட்டப்பஞ்சாயத்துக்கு மராட்டிய மாநிலத்தில் வருகின்றது தடை!

## அரசாணை வெளியீடு



மராட்டியம், ஒக்.22

மதம் மற்றும் சாதி மறுப்பு திருமணங்களுக்கு எதிராக நடைபெறும் ஆணவக் கொலைகள், இவ்வாறு திருமணம் செய்த தம்பதிகளுக்கு எதிராக கட்டபஞ்சாயத்து மூலம் மோசமான தண்டனை வழங்கும் நடைமுறைகள் மராட்டிய மாநிலத்தில் அதிகரித்து வருகிறது. அதுமட்டும் இன்றி இவற்றால் வன்முறைகளும் வெடிக்கின்றன. இதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மராட்டிய அரசு ஆராம்பித்துள்ளது.

இதுகுறித்து புதிய விதிமுறைகள் அடங்கிய அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது:-

மராட்டியம் முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்கள் அந்தந்த அதிகார வரம்பில் உள்ள பகுதியில் சாதி அல்லது மத மறுப்பு திருமணங்கள் நடப்பது குறித்து தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கட்டபஞ்சாயத்து நடப்பது தெரிந்தால் அதிகாரிகள் அதன் உறுப்பினர்களை தொடர்பு கொண்டு, சட்டப்படி இதுபோன்ற கூட்டங்கள் நடத்த அனுமதி இல்லை என்பதை தெரிவிக்க வேண்டும். இதுகுறித்து உள்ளூர் பொலிஸார் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தேவைப்பட்டால் அத்தகைய கூட்டங்களைத் தடை செய்ய வேண்டும். தடையை மீறி கூட்டம் நடத்தப்பட்டால், துணை பொலிஸ் அதிகாரி கட்டாயம் அந்த கூட்டத்தில் கலந்துகொண்டு சம்பந்தப்பட்ட தம்பதிகள் அல்லது அவர்களது உறவினர்களுக்கு தீங்கு விளைவிக்க கூடிய எந்த முடிவுகளையும் எடுக்க கூடாது என்று வலியுறுத்த வேண்டும். இதுபோன்ற கூட்டங்களை பொலிஸார் வீடியோ பதிவு செய்ய வேண்டும் மற்றும் விதிகளை மீறி முடிவுகளை எடுப்பவர்கள் மீது கிரிமினல் குற்ற வழக்குப் பதிவுசெய்ய வேண்டும். மேலும் கட்டப்பஞ்சாயத்து அல்லது அத்தகைய அமைப்புகளின் கூட்டத்தை சட்டப்படி தடை செய்ய முடியாவிட்டால் மற்றும் தம்பதிக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருந்தால், குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் அந்த பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

இதேபோன்று சாதி மற்றும் மத மறுப்பு திருமணம் செய்யும் தம்பதிகளுக்கு உறவினர்கள், சமூகத்தை சேர்ந்தவர்கள் மற்றும் கட்ட பஞ்சாயத்து போன்ற அமைப்புகளிடம் இருந்து வரும் மிரட்டல்கள் குறித்து தம்பதியிடமிருந்து வரும் புகார்களை உள்ளூர் அதிகாரிகள் விசாரித்து ஒரு வாரத்திற்குள்

அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தம்பதிகளை மிரட்டியவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும். இந்த விதிகளை வேண்டுமென்றேஅல்லதுஅலட்சியம்காரணமாககடைப்பிடிக்காத பொலிஸ் அதிகாரிகள் மீது துறை ரீதியான விசாரணை மேற்கொள்வதோடு, அவர்கள் தண்டனைக்குரிய நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும். -என்றுஅரசாணையில்கூறப்பட்டுள்ளது.





# குஜராத்தில் வாகன சாரதிகளுக்கு தீபாவளிப் பரிசாக அபராதம் விலக்கு

அகமதாபாத், ஒக்.22

குஜராத்போக்குவரத்துத்துறைவாகனசாரதிகள்தவறிழைக்கும் பட்சத்தில் அவர்களிடம் இருந்து அபராதம் அறவிடப்படமாட்டாது என்று அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையையொட்டி 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை வாகனசாரதிகளிடம் இருந்து குஜராத் போக்குவரத்துறை காவல்துறை எந்த அபராதமும் வசூலிக்காது.

ஆனால், இதனைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து விதிகளை பின்பற்றக்கூடாது என்று அர்த்தம் இல்லை. இருந்தும் தவறு செய்தால் அபராதம் கட்டத் தேவையில்லை என குஜராத் உள்துறை மந்திரி ஹர்ஷ் சங்கவி கூறியுள்ளார்.

குஜராத்தில் சில நாட்களாக இவ்வாறு அபராதம் தளர்த்தப்பட்ட நிலையில், தமிழக அரசு போக்குவரத்து விதிமீறலுக்கான 'ஸ்பொட்' அபராதத்தை உயர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் எல்லைக் கண்காணிப்புக்காக 1,000 ஹெலிகள், 80 ட்ரோன் விமானங்கள்!

## அவசரமாகக் கொள்வனவு செய்கின்றது இந்திய அரசு





லடாக், ஒக்.22

சீன எல்லை பகுதியை கண்காணிக்க வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு, ஆயிரம் கண்காணிப்பு ஹெலிக்கொப்டர்களையும், ரிமோட் மூலம் இயக்கப்படும் 80 ட்ரோன் விமானங்களையும் வாங்க இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளது.

இந்தியா -சீனா எல்லை கோடு அருகே உள்ள கிழக்கு லடாக்கில் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக இருநாட்டு படைகளுக்கு இடையே மோதல் போக்கு நிலவி வருகின்ற நிலையில். பலசுற்று பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு பல இடங்களில் இருந்து படைகள் வெளியேறியிருந்தாலும், இன்னும் சில இடங்களில் படைகள் முகாமிட்டுள்ளன.

அதனால் பதற்றம் நீடிக்கும் நிலையில், சீன எல்லை பகுதியை கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதை கருத்தில்கொண்டு, ஆயிரம் கண்காணிப்புக் ஹெலிக்கொப்டர்களையும், ரிமோட் மூலம் இயக்கப்படும் 80 ட்ரோன் விமானங்களையும் வாங்க இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளதுடன், இதற்கான பணியையும் தொடங்கி உள்ளது.

துல்லியமாக கண்டறியும் குட்டி விமானத்தில் 'சென்சார்' கருவிகள் உள்ளன.

அவை எதிரியின் இருப் பிடத்தை கண்டறிதல், இலக்கை அடையாளம் காணு தல் உள்ளிட்ட பணிகளைத் துல்லியமாக மேற் கொள் ளும். பகல், இரவு இருவேளைகளிலும், உயரமான பகுதிகளிலும் கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குட்டி விமானங்களை விநியோகம் செய்ய கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கு நவம்பர் 16 ஆம் திகதி கடைசிநாள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தேர்வு செய்யப்படும் நிறுவனம், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 12 மாதங்களுக்குள் குட்டி விமானங்களை விநியோகிக்க வேண்டி இருக்கும்.

ஆயிரம் உளவு ஹெலிக்கொப்டர்கள், அவசரகால கொள்முதல் நடைமுறையின் கீழ் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்த ஹெலிக்கொப்டர்களும் 'சென்சார்' கருவிகளுடன் எதிரிகளை துல்லியமாக அடையாளம் காணக்கூடியவை. பகலிலும், இரவிலும் கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்பள்ளியின் புதிய கட்டடம் நிலாவெளியில் திறந்து வைப்பு





(பைசல் இஸ்மாயில்)

குச்சவெளி பிரதேச சபையினால் சுமார் 30 லட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் நிலாவெளி – கோபாலபுரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளி பாடசாலையின் புதிய கட்டடத்தை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் திறந்து வைத்தார்.

குச்சவெளி பிரதேச சபையின் நிலாவெளி வட்டார உறுப்பினர் ஜெ.நிமலகாசனின் முன்மொழிவுக்கமைய இந்த முன்பள்ளி பாலர் பாடசாலைக்கான நிர்மாணப் பணிகள் தவிசாளரினால் முன்னெடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது தவிசாளர் ஏ.முபாறக் உரையாற்று கையில் –

ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்கு சிறந்த சூழலும், அதற்கான வசதிகளும் இருக்க வேண்டும். அதற்கு இந்தக் கட்டடம் சிறந்த உதாரணமாக அமையும். ஊர்மக்கள் தங்களது பிரச்சினைகளை தங் கள்வட்டார உறுப்பினர் ஊடாகத் தெரியப்படுத்தி உரிய தீர்வை பெற்றுக்கொள்ள அவருடன் ஒத்து ழைத்து தங்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று பாலர் பாடசாலையின் பெற் றோர்கள், முன்பள்ளி ஆசிரியையுடன் பூரணமாக ஒத்துழைப்பு வழங்கி, மாணவர்களின் கல்வி சார்ந்த மற்றும் இதர விடயங்களில் பங்கேற்று, ஆரோக்கியமான, அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்ப முன்நிற்க வேண்டும் என்றும் தவிசாளர் கேட்டுக்கொண்டார். அத்துடன் நிலா வெளி பொது நூலகத்தை இலத்திரனியல் நூலகம் ாக மிக விரைவில் மாற் றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கான சகல முயற்சிகளு முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

பிரதேச சபையின் செயலாளர் (திருமதி) மாலினி அசோக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவில் பிரதம அதியாக குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக்கும், கௌரவ அதிதிகளாக உப தவிசாளர் எஸ்.எம்.சாஜித், ஜீ.ஏ.பழில் அமீன், பி.வைத்தியலிங்கம், ஜெ.நிமலகாசன் நிலாவெளி உப அலுவலக பொறுப்பதிகாரி ஆகியோரும் பங்குபற்றினர். புல்மோட்டை உப அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் பொது மக்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அரச அலுவலர்களுக்கு 2 ஆம் மொழிக் கல்வி



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)


அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் அரச அலுவலர்களுக்கு நடைமுறைப்படுத் தப்படும் சிங்கள, தமிழ் மொழிக் கற்கைநெறிகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 18/2020 சுற்று நிருபத்திற்கமைவாக தமிழ் பேசும் அரச அலுவலர்களுக்கு சிங்களமொழிப் பாடநெறியும், சிங்களமொழி பேசும் அரச அலுவலர்களுக்கு தமிழ்மொழிப் பாடநெறியும் அறிமுகப்படுத்தப்பட்டுநடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், இப் பாடநெறி கோறளைப் பற்று மேற்கு கல்வி கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரி– யர்ளுக்கும் இடம்பெற்றது.

நாட்டின் நிர்வாகத்துறையைச் சிறப்பாக முன்னெடுக்கும் வகையிலும், சகல இன ம க்களிடத்திலும் மொழி வழியிலான சமாதானம், ஐக்கியம், இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வகையிலும் அரச உத்தியோகத்தர்களை இரு மொழிப்பயன்பாட்டிற்கு தேர்ச்சி பெறச்செய்யும் நோக்கில் தமிழ் பேசும் அரச ஊழியர்களுக்கு சிங்களமொழிப் பாடநெறியும், சிங்களமொழி பேசும் அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழிப் பாடநெறியும்அறிமுகப்படுத்தப்பட்டுநடைபெற்று வருகின்றன.

150 மணித்தியாலய இப்பயிற்சிநெறிக்கு வள வாளராக அரச கரும மொழிகள் திணைக்களத்தி ன் போதனாசிரியர் ஏ.கே.எம்.றிம்ஸான் கலந்து கொண்டு பாடநெறியை ஆரம்பித்து வைத்தார்.

# ஓட்டமாவடி பொதுநூலகம் வானம் பார்க்கும் நிலையில்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள ஓட்டமாவடி பொதுநூலகக் கட்டடம் வானம் தெரியும் நிலையில் சேதமடைந்து மிக நீண்ட காலமாக காட்சிய ளிக்கிறது.

கூரைகள் உடைந்தும் கதவுகள் சேதமடைந்த நிலையிலும் காணப்படும் இக் கட்டடத் தொகுதி புறாக்களின் வசிப்பிடமாக மாறி வருகிறது.

தாய், சேய் நிலையம் அமைந்துள்ள இக் கட்டடத் தொகுதிக்கு குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், மழை காலங்களில் கூரைகள் வழியாக கட்டடத்துக் குள் மழைநீர் தேங்கி நின்று கட்டடம் இன்னும் பாரிய சேதங்கள் ஏற்படும் நிலையும் காணப்படுகிறது.

எனவே, இதனை பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனமெடுத்து புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இறக்காமம், அட்டாளைச்சேனையில் கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் வழி காட்டாலின் கீழ் இறக்காமம் மற்றும் அட்டாளைச் சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதேசத்தில் கட்டாக்காலி மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை நிகழ்வுகள் கல்முனை பிராந்திய தொற்று நோயியல் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சி.எம்.பஸாலினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில்பிராணிகளுக்கு தடுப்பூசி ஏற்றுனர் ஏ.டீ எம். பஸ்லின் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிம னை சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.








# பிரிவினைவாதத்தை வலுப்படுத்துகின்ற 13 ஆவது அரசமைப்பு திருத்தம் முழுமையாக ஒழியவேண்டும்!



## சரத் வீரசேகர கோரிக்கை

இலங்கை பௌத்த நாடாக இருந்தால் மாத்திரமே ஏனைய இனத்தவர்கள் தமது மதங்களை கடைப்பிடித்து சுதந்திரமாக வாழ முடியும்.

நாட்டின் ஒருமித்த தன்மையைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். பிரிவினைவாதத்தை வலுப்படுத்தும் 13 ஆவது திருத்தம் முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும்.

மத்திய அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கம் பிரிவினைவாதிகளுக்கு உண்டு, அதனால் 22ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களிப்பேன் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்ட மூல வரைவு மீதான விவாதத்தின் போது உரையாற்று கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டுமக்களின் எதிர்பார்ப்புக்கமைய அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது என குறிப்பிடுவதற்கு உடன்பட போவதில்லை. நாட்டு மக்கள் அரசமைப்பு திருத்தத்தைக் கோரவில்லை, புதிய அரசமைப்பு உருவாக் கத்தையே கோரினார்கள். புதிய அரசமைப்பு உரு வாக்கத்துக்காகவே நாட்டு ம க்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆணை வழங்கினார்களே தவிர அரசமைப்பு திருத்தத்துக்கல்ல என்பதை குறிப்பிட் டுக் கொள்ள வேண்டும். ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவினர் புதி ய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வரைவை சம ர்ப்பித்துள்ளார்கள். அந்த வரைவு தற் போதைய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருதத்துக்கு எதிராக வாக்களித்தேன். 2020ஆம் ஆண்டு 19ஆவது திருத் தத்தை இரத்து செய்வதற்காக 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தேன். தற்போது எனது கொள்கைக்கமைய 20 ஆவது திருத்தத்தை இரத்து செய்வதற்காக ஆதரவு வழங்க முடியாது, ஆகவே 22ஆவது திருத்தத்துக்கு எதிராகவே வாக்களிப்பேன்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறையில் இருக்கும் வரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்த ஒத்து ழைப்பு வழங்கமாட்டேன். இலங்கை – இந்தியா ஒப்பந் தத்தின் ஊடாகப் பலவந்தமான முறையில் 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. 13ஆவது திருத்தத்தின் வியூகம் தொடர்பில் பாரதூரமான பிரச்சினை காணப் படுகிறது.

ஒருமிருத்த மற்றும் ஐக்கியம் என்ற பதத்தின் வரை விலக்கணத்தை பெரும்பாலானோர் அறியவில்லை. ஒருமித்த நாட்டில் அனைவருக்கும் பொதுவான ஒரு சட்டம் மாத்திரமே காணப்பட வேண்டும்.ஐக்கிய நாட்டில் 9 மாகாணங்களுக்கும் மாறுப்பட்ட சட்டங்கள் இருக்க முடியும்.நிலப்பரப்பில் பரந்தளவான நாடுகள் மாத் திரமே ஐக்கிய நாடுகளாக காணப்படுகின்றன.இலங்கை போன்ற சிறிய நாட்டை பிளவுப்படுத்தினால் மாத்திரமே ஐக்கியப்படுத்த முடியும்.

13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த அரசியலமைப்பின் ஊடாக ஒருசில தடைகள் ஏற்படுத்தப்பட்டன. தென்சூடான்,இந்தோனேஷியாவின் கிழக்கு திமோருக்கு நேர்ந்த கதியை இலங்கைக்கு நே ஒருபோதும் இடமளிக்க முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு அதி காரத்தை வழங்கும் 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடு களை இரத்து செய்ய வேண்டும் அத்துடன் காணி மற் றும் பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் மாகா ணங்களுக்கு பகிர்ந்தளிக்கக் கூடாது. மாகாண சபைகளின் அதிகாரத்தை வலுப்படுத்தினால் நாடாளும ன்றம் மலினப்படுத்தப்படும். மத்திய அரசாங்கத்தை பலவீனப்படுத்துவது பிரிவினைவாதிகளின் பிரதான நோக்கமாக உள்ளது. அதற்காகவே 13 ஆவது திருத் தம்,17 மற்றும் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது அதனால் தான் நான் எதிர்ப்பு தெரிவித்தேன்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் உண்மையில் சுயாதீனமானவையா என்பதை ஆராய வேண்டும். 2015 ஆம் ஆண்டு தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினராக தமிழ் இனவாத போக்குடைய ஹூல் என்பவர் நியமிக்கப்பட்டார். சிங்கள மொழி குப்பை கூடை என்று குறிப்பிட்டவர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். ஆணைக்குழுக்களுக்குத் தொண்டு நிறுவனங்களின் தரப்பினர் நியமிக்கப்படும் போது மக்கள் ஆணைக் குழுக்கள் மீது நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.அரச சேவைகளை மாத்திரம் சுயாதீனப்படுத்த வேண்டும்.

நாட்டின் ஒருமித்த தன்மை மற்றும் புத்தசாச னத்தையும் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற் பட்டுள்ளேன். இலங்கை பௌத்த நாடாக இருந்தால் மாத்திரமே ஏனைய இனத்தவர்கள் தமது மதங்களை கடைபிடித்து சுதந்திரமாக வாழ முடியும். இலங்கையின் ஒருமித்த தன்மை அதற்கு பாதுகாக்கப்பட வேண்டும். குருந்தூர் மலையில் பௌத்த விகாரைஷ்யும்,வடக்கில் புத்தர் சிலையையும் ஸ்தாபிப்பதற்கு தடையேற்படுத்தப் படுகிறது, இதற்கு 13ஆவது திருத்தம் ஊடாக அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, ஆகவே 13 ஆவது திருத் தம் முழுமையாக இரத்து செய்யப்படும். – என்றார்.

# காலநிலைமாற்றம் தொடர்பான கலந்துரையாடல் மன்னாரில்!



மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் காலநிலை மற்றும் அபி விருத்திகளால் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர் பான விசேட கலந்துரையாடல் வியாழக்கிழமை மன்னார் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் விசேடமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அனர்த்த அபாயக் குறைப்புக்கான அபிவிருத்தி தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் விரிவுரையாளர்களாக யாழ் பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா ,யாழ் பல் கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் சங்கரப்பிள்ளை ரவி, யாழ்.பல்கலைக்கழக நீர்பாசன பொறியியலாளர் ச.சர்வராஜா மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச திணைக் கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

# கல்முனை சந்தான்கேணி மைதானம் செப்பனிடும் பணிகள் ஆரம்பமாகின





(பாறுக் ஷிஹான்)

கல்முனை சந்தான்கேணி பொது மைதானத்தைச் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்முனை விக்டோரியஸ் விளையாட்டு கழகத்தின் வேண்டுகோளை ஏற்று, கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பொது மைதானத்தை செப்பனிடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்த ரவிட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சமூக ஊடகங்க ளில் குறித்த மைதானத்தின் நிலைமை தொடர்பில் ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கல்முனை விக்டோரியஸ் விளையாட்டுக்கழக தவிசாளர் ஏ.எம் நியாஸ் மைதா னம் தொடர்பில் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார்.

இதற்கமைய அந்த மைதானத்தில் காடுமண்டியி ருந்த பகுதிகள் இனங்காணப்பட்டு கனரக(பெக்கோ) வாகனம் மூலம் அவை அகற்றப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கல்முனை விக்டோரியஸ் விளை யாட்டுக்கழக தவிசாளர் ஏ.எம் நியாஸ் ,கல்முனை விக்டோரியஸ் விளையாட்டு கழக தலைவர் ஏ.டபிள்யூ. எம் ஜெஸ்மீன் ,பொதுச்செயலாளர் ஏ.ஜே.சமீம் செப்பனிடப்பட்டு வருகின்ற மைதானத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பான கோரிக்கையை ஏற்று துரித நடவடிக்கை மேற்கொண்ட மாநகர முதல்வர் மற்றும் கல்முனை மாநகர சபை பொறியியலாளர் எம்.ஜெளஸி ஆகியோருக்கு நன்றிகளை தெரிவித்தனர்.

கல்முனை விக்டோரியஸ் விளையாட்டு கழகம் 2023 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபையை தெரிவு செய்து செயற்பட்டு வருகிறது.

சுமார் 35 வருடங்களுக்கு மேலாக இப்பிராந்தி யத்தில் செயற்படும் க்கழகத்தில் பல்லின மக்கள் உள்வாங்கப்பட்டு இயங்கி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# யாழ். மாவட்ட பண்பாட்டு விழாவும் விருதுகள் வழங்கல் நிகழ்வும்!






யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு பேர வையும் , யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் , வடமாகாண பண்பாட்டலுவல்கள் இணைந்து நடத்திய யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு விழா நேற்று (வெள் ளிக்கிழமை) யாழில் உள்ள தனியார் மண் டபம் ஒன்றில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் , பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்,எம். சமன் பந்துலசேனவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் , விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி விழாவில் ,'யாழ்ப்பாணம்' எனும் நூல் வெளியீடும் , 'இளங்கலைஞர்' விருது மற்றும் 'யாழ் முத்து' விருது ஆகிய விருதுகளும் வழங்கி வைக்கப் பட்டன.

## ஏனைய.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில்,

விடுதலையான எமது தமிழ்ச் சகோதரர்களான கைதிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவியளிக்குமாறு அதாவது தொழில்களை வழங்கி உதவுமாறு தமிழ்த் தொழில் அதிபர்களையும், நல்ல தமிழ் குணவான்களையும் கேட்டுக் கொள்கின்றேன். தயவு செய்து புலத்துக்கு வெளியிலுள்ளதமிழ் உறவுகளும் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அந்தவகையில் வரதராஜன், ரகுபதி சர்மா, சுதா, நவதீபன், ராகுலன், காந்தன், இலங்கேஷ்வரன், ஜெபநேசன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள் ளார்கள் என்பதை அறியக்கூடியதாகவுள் ளது. இவர்கள் தமது குடும்பங்களோடு இணைந்து வேதனைகளை மறந்து மகிழ்ச்சியோடு வாழப் பிரார்த்திக்கின்றோம்.

மீண்டும் ஜனாதிபதியின் முன்மாதிரியான செயற்பாடுகளை வரவேற்பதோடு அந்தச் செயற்பாடு எதிர்காலத்தில் தொடர வேண்டும் என்பதையும் எதிர்பார்க்கின்றோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வைத்தியர்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த வழக்குகளில் எதிரியாக உள்ளவர்கள் தெற்கில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வழக்குகளின் முக்கிய சாட்சியாக உள்ள சட்ட வைத்திய அதிகாரியான வைத்தியர் எஸ். சிவரூபனும் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு விசாரணைகளுக்காக எதிரிகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீதிமன்றங்களுக்கு அழைத்து வரப்படும் போது, எதிரிகளுடன் சாட்சியும் ஒரே சிறைச்சாலை வாகனத்தில் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்தநிலையில், கிளிநொச்சியில் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது ,எதிரிகளுடன் சாட்சியமான தன்னையும் ஒரு வாகனத்தில் அழைத்து வரப்படுவதால், தனது உயிருக்கு ஆபத்துள்ளது என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு வைத்தியர் கொண்டு வந்தார்.

அதையடுத்து , வழக்குகளின் முக்கியமான சாட்சியமான சட்ட வைத்திய அதிகாரியின் பாதுகாப்பு குறித்து விசேட கவனம் செலுத்துமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

பளை வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரான சின்னையா சிவரூபன் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளது மீள் உருவாக்கம், வெடிபொருள்களைப் பதுக்கி வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார். இவரது கைதைத் தொடர்ந்து தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவருடன் கைதான 7 முன்னாள் போராளிகளும் இரண்டு வருடங்களுக்குத் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குற்றச்சாட்டுக்கள் ஏதும் சுமத்தப்படாது அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்தநிலையில் மருத்துவர் சிவரூபனின் விடுதலை திட்டமிட்டு இழுத்தடிக்கப்படுகின்றது எனக் குடும்பத்தவர்கள் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது.

## பஸ்ஸில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸில் சன நெரிசலில் குறித்த இளைஞர் தனக்கு முன்னால் நின்ற யுவதியைப் பிளேட்டால் வெட்டியுள்ளார்.

காயத்துக்குள்ளான யுவதி சத்தமிடவே சக பயணிகள் சுதாகரித்துப் பிளேட்டால் வெட்டிய இளைஞரை பஸ்ஸுக்குள் மடக்கிப் பிடித்தனர். குறித்த இளைஞர் யாழ்., எழுதுமட்டுவாழ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டார்.

## போதைப்.........

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த மாணவன் போதை ஊட்டிய பாக்குடன் பாடசாலைக்கு வருகை தந்தார். அது தொடர்பில் அறிந்த ஆசிரியர்கள் மாணவனிடம் விசாரணைகளை முன்னெடுத்துப் போதைப் பாக்கையும் மீட்டனர். அதையடுத்து அதிபர் ஊடாக அப்பகுதி சுகாதாரப் பரிசோதகருக்குச் சம்பவம் தொடர்பில் அறிவித்த போது , குறித்த மாணவன் தனது கையைப் பிளேட்டால் வெட்டினார்.

இதனால் காயத்துக்குள்ளன மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார். மாணவனுக்கு எங்கிருந்து போதைப் பாக்கு கிடைத்தது? போதைப் பாக்கைப் பாடசாலைக்கு அருகில் யாரேனும் விற்பனை செய்கின்றார்களா? என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## வீதியில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிப்பறிக் கொள்ளையனை மடக்கிப்பிடித்தனர். இலங்கை இராணுவத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றும் கொல்லங்கலட்டியை சேர்ந்தவரே இவ்வாறு மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பலாலி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மாணவியிடமிருந்தஅபகரித்தசங்கிலியையும் அவரிடம் இருந்து மீட்கப்பட்டது.

சந்தேகநபரை பொலிஸார், பலாலி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற போது இராணுவத்தினர் தலையீடு செய்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. எனினும், மக்களின் எதிர்ப்பால் இராணுவத்தினரின் இடையூறு கைவிடப்பட்டது. சந்தேகநபர் பலாலி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக் கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

## 22ஆவது.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில், இந்த அரசமைப்புத் திருத்தத்துக்காகத் தொடர்ந்து வாதிட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சிவில் மற்றும் அரசியல் சக்திகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையை எதேச்சதிகார ஆட்சிக்கு மாற்றும் நோக்கில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து 22ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானமானது ஒரு மிக முக்கியமான இடைக்கால அரசமைப்பு சீர்திருத்தமாகும். இது புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தத் தருணத்தில், அனைத்து அரசியல் சக்திகளும் இந்தச் சாதனையால் வலுப்பெற்று, ஜனநாயகத்தை வலுப்படுத்தி, நாட்டினதும் மக்களினதும் நிரந்தர நல்லிணக்கத்துக்காக - நிரந்தர தீர்வுக்காக ஓரணியில் செயற்பட வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2022இல் வெளியிடப்பெற்றது.